இருக்காது. நேற்றைய தினம் 20 கேள்விகள்: சம்பந்தப்பட்ட எநத அமைச்சரும் வரவில்லை. நாவலர் ஒருவர்தான் இருந்தார். ஆனால, அவர் சம்பந்தப்பட்ட கேள்விகள் இல்லை. ஆகவே, இதுபற்றிய விளக்கத்தை எல்லாம் நான் இப்போது அனுமதிக்க முடியாது.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

டெல்லி—தமிழ்நாடு இல்லத்தில் பெருந்தலைவர் காமராஜ் சிலை.

*வினா எண் 486—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலையை வைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்ளே, தனக்கென வாழாது பிறருக்காகவே வாழ்ந்து மறைந்த மனிதர் குல மாணிக்கம் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலையை இனியாவது அங்கே வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, யாருடைய சிலையையும் அங்கே வைக்கின்ற முடிவை அரசு எடுத்துக் கொண்டிருக்கவில்லை என்பதைத்தான் நான் இல்லை என்று குறிப்பிட்டேன். முன்னாள் முதல்வர் அவர்கள் என்ற முறையில் அவர்களுடைய உருவப் படங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆந்திரகேசரி திரு. பிரகாசம், திரு. ஓ. பி. ராமசாமி, திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா, மூதறிஞர் ராஜகோபாலாச்சாரி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் எம். பக்தவச்சலம், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருடைய உருவப்படங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கே பேரறிஞர் அண்ணாவின் அரை உருவச் சிலையும், திருவள்ளுவரின் முழு உருவச் சிலையும் வைக்கப்பட்டிருக்கின்றன. வேறு யாருடைய சிலையையும் வைக்கின்ற திட்டம் அரசிடத்திலே இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டெல்லியிலே தமிழ்நாடு இல்லம் அமைப்பதுபற்றி பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராக இருக்கும்போது திட்டமிடப்பட்டது. அதற்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் காலத்திலே அதற்குத் திறப்பு விழா நடத்தப்பட்டது. ஆகவே,

1981 மார்ச் 26]

அண்ணாவின் உருவச் சிலை அங்கே வைக்கப்பட்டிருப்பதைப் போல பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் உருவச் சிலையையும் வைப்பது எல்லாவிதத்திலும் பொருத்தமாக இருக்கும். ஆகவே அதை இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அரசு கொண்டிருக்கிற கொள்கை, உயிரோடு இருக்கிற தலைவர்களுடைய உருவச்சிலையை எங்கேயும் வைக்கக் கூடாது என்பது. மறைந்த பெருந்தலைவரின் உருவச் சிலையை வைப்பது பற்றி மறுப்பு எதுவும் இல்லை என்றாலும், யாருடைய உருவச் சிலையையுமே இப்போது டெல்லியில் இருக்கும் தமிழ் நாடு இல்லத்தில் வைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது அரசினிடம் இல்லை என்றுதான் சொன்னேன். உரியவர்களிடத்தில் இருந்து உரிய கோரிக்கை வந்தால் அரசு அதைப்பற்றி ஆராயும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பது ஆண்டுகாலம் தமிழ்நாட்டில் சிறப்பாகப் பதவி வகித்து வட நாட்டிலும் தமிழ் நாட்டைப்பற்றி மரியாதையை ஏற்படுத்திய பெருநதலைவர் காமராஜ் அவர்களுடைய உருவச் சிலையை, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் வைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்றாலும் கூட, இனிமேலாவது அதற்குத் திட்டம் இட்டு, அதை நிறைவேற தமிழக அரசு முன் வருமா? அதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் கோரிக்கைகளாகக் கொண்டு இந்த அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களின் உருவச் சிலையை வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதையும் உரிய முறையில் அரசு ஆராயும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லமும், அதிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையும் இப்போது நம்முடைய பேரவைத் தலைவராக இருக்கிற உங்கள் முயற்சியினால்தான் உருவாக்கப் பட்டது. ஆனால், வைக்கப்பட்டிருக்கிற அறிஞர் அண்ணாவினுடைய உருவச் சிலையை தமிழ்நாடு இல்லத்திற்கு வெளியே

வைக்காமல் உள்ளே ஒரு ரூமுக்குள் வைத்து பூட்டியிருக்கிறார்கள். அதை வெளியே பிரம்மாண்டமான முறையில், எல்லோரும் பார்க்கின்ற வகையில் வைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணாவினுடைய உருவச் சிலை தமிழ்நாடு இல்லத்தில், எல்லோராலும் மதிக்கத்தக்க வகையில், மரியாதைக்குரிய வகையில் எங்கே வைக்க வேண்டுமோ அங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறது. தவறான இடத்தில் ஒன்றும் அந்தச் சிலை வைக்கப்படவில்லை. எங்கு வைக்கப்படவேண்டுமோ அங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண் போலீஸ் படை.

*வினா எண் 487—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறையில் பெண் போலீஸ் படையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். காவல் துறையில் பெண் போலீஸ் படையை விரிவு படுத்துவதற்கு பின் வரும் கூடுதல் பெண் காவலர்களை நியமிக்க அரசு நிலை ஆணை எண். 2113, உள்துறை நாள் 12—8—80-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

1. பெண் சப் இன்ஸ்பெக்டர் .. 60 பேர்.
2. பெண் தலைமைக் காவலர் .. 60 பேர்.
3, பெண் காவலர் .. 600 பேர்-

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களுடைய பதிலிலிருந்து பெண் போலீஸ் படையை விரிவு படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது இருக்கிற பெண் போலீசார்கள் சட்டம், ஒழுங்கு துறையில் இருக்கிறார்களா? அல்லது குற்றப் பிரிவில் இருக்கிறார்களா? போக்குவரத்துப் பிரிவில் இருக்கிறார்களா? ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? இன்னும் விரிவுபடுத்துகின்ற காலத்தில் எந்தப் பிரிவுகளிலே சேர்க்கப்படுவார்கள் என்றும் தெரிவிப்பார்களா? குறிப்பாக சட்டம் ஒழுங்குப் பிரிவிலே அவர்களை சேர்ப்பது சரியாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?